09-10-2023 அ.வ.எண்.324/2023 PW- 1

| | |
|---|---|
| பெயர் | கனகராஜ் |
| த.பெ. | ஆறுமுகம் |

<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு **1-**ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1) வழக்கு சொத்து பற்றிய விபரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். வழக்கு சொத்து விபரங்கள் என்ன என்றால் 176/1-ல் எங்களுக்கு பாத்தியப்பட்ட சொத்தினை 173-ல் எங்களுக்கு வழிவிடவேண்டும் அதை தடுத்து வருகிறார்கள். 173-ல் கண்ட சொத்து பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டதா என்றால் ஆமாம் அவர்கள் அப்பாவிற்கு பாத்தியப்பட்டது அதன் மூலம் அவருக்கு வரும். பிரதிவாதி, அவருடைய அப்பா மற்றும் தம்பி ஆகியோர் பாகம் பிரித்து கொண்டது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. 1-ம் பிரதிவாதி எங்கு குடியிருக்கிறார் என்றால் எனக்கு தெரியாது. 173-ல் உள்ள சொத்து பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது அல்ல என்றும் நான் வேண்டும் என்றே அவர் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் தவறு.

2) நான் இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே 173, 176/1 ஆகிய சொத்துகளுக்கு வில்லங்க சான்று எடுத்து பார்த்துதான் வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். நான் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு சொத்து சம்பந்தமாக வருவாய் துறை ஆவணங்களான பட்டா, சிட்டா ஆகியவற்றை சரிபார்த்துதான் வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் பார்த்தேன். என் அப்பாவின் பெயர் ஆறுமுகம். க.ச.176/1-க்கு கோட்டாட்சியரிடம் நடந்த வழக்கை என் தந்தைதான் தாக்கல் செய்தாரா என்றால் ஆமாம். கோட்டாட்சியரிடம் வழக்கு தாக்கல் செய்த விவரத்தை பற்றி இந்த வழக்கில் நான் எதுவும் கூறவில்லை என்றால் இந்த வழக்கில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் தெரியாது.

3) அந்த வழக்கில் உத்தரவு போட்ட விபரம் எனக்கு தெரியும் என்றால் தெரியும். தற்போது என்னிடம் காட்டப்படும் கூட்டுபட்டாவில் பிரதிவாதி ரவிந்தர் பெயரும் உள்ளது என்றால் ஆமாம் உள்ளது. ஆனால் அவருக்கு அந்த சொத்தில் உரிமைகள் எதுவும் இன்றி தவறாக சேர்க்கப்பட்டுள்ளது **(**மேற்படி பட்டா எண் **990** பிரதிவாதி சா**.**ஆ**.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது**)**. மேற்படி பட்டாவில் பிரதிவாதியின் பெயர் கண்டுள்ளது என்ற விபரத்தை நான் இந்த வழக்கில் சொல்லவில்லை என்றும், இந்த பட்டாவை இவ்வழக்கு ஆவணமாக தாக்கல் செய்துளேன் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது, வழக்கு ஆவணங்கள் பட்டியலில் தாக்கல் செய்யவில்லைலல.

4) 176/1-ல் என் ஆவணப்படி எவ்வளவு பங்கு உள்ளது என்றால் 1/6 (ஆறில் ஒரு பங்கு உள்ளது). என்னுடைய தாவா சொத்து விபரத்தில் 176/1 ல் எனக்கு 1/6 பங்கு தான் உள்ளது என்று குறிப்பட்டுள்ளேனா என்றால் இல்லை. கோட்டாட்சியர் என்ன உத்தரவு வழங்கினார் என்றால் சிட்டாவில் பெயர்நீக்கம் செய்ய முடியாது ஆனால் 176/1 ல் அவர்களுக்கு உரிமை இல்லை என்று உத்தரவு வழங்கினார்.

கோட்டாட்சியர் வழங்கிய உத்தரவில் பிரதிவாதி ரவிந்தருக்கு 176/1-ல் கிணறு மற்றும் வண்டிபாதை பாத்தியம் உண்டு என்று உத்தரவு வழங்கியுள்ளாரா என்றால் சரிதான்.

5) பிரதிவாதியின் தாத்தா வேலப்பகவுண்டர் மற்றும் என் தாத்தா ஆகியோர் பெற்ற நீதிமன்ற உத்தரவில் கிணறு பிரதிவாதியின் தாத்தா மற்றும் என்னுடைய தாத்தாவிற்கும் தான் பாத்தியம் என்று நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது என்றால் சரிதான். இவ்வாறு பிரதிவாதிக்கு நீதிமன்ற உத்தரவு மற்றும் கோட்டாட்சியர் உத்தரவு ஆகியவற்றின் அடிப்படையில் கிணறு மற்றும் வண்டிபாதை பாத்தியதை உள்ள நிலையில் அவருக்கு எதிராக தாக்கல் செய்த இந்த வழக்கு சட்டத்திற்கு புறம்பானது என்றால் தவறு.

6) க.ச.176/1-ல் யாருக்கு 1/12 (பன்னிரண்டில் ஒரு பங்கு) என்றால் 1-ம் வாதி பழனிச்சாமிக்கு ஆகும். இந்த விவரத்தை வழக்கு சொத்து விபரத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நீதிமன்றத்தின் உத்தரவின் அடிப்படையில் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளபோது உத்தரவில் குறிப்பிட்ட சொத்து விபரத்தினை மறைத்து இந்த வழக்கு சொத்து விபரத்தில் குறிப்பிடாமல் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் தவறு. 1-ம் பிரதிவாதி இலவச மின்சாரம் வேண்டி 2,3 பிரதிவாதிகளிடம் 2006-ம் ஆண்டு விண்ணப்பம் கொடுத்துள்ளார் என்றால் ஆமாம். சீனியாரிட்டி அடிப்படையில் பிரதிவாதிக்கு மின் இணைப்பு கொடுக்க கூடாது என்று நான் ஆட்சேபனை செய்தேன் என்றால் செய்தேன்.

7) நான் அந்த ஆட்சேபனை மனுவில் கோட்டாட்சியரிடம் மனு விசாரணையில் உள்ளது என்று கூறி ஆட்சேபனை செய்தேனா என்றால இல்லை. சொத்து எங்களுக்குரியது என்று கூறி ஆடசேபனை செய்தேன். விவசாயம் தொடர்பான மின் இணைப்புகள் விவசாய நிலங்கள் வழியாகதான் கொடுத்து வருகிறார்கள் என்றால் முதலில் அப்படி இருந்தது தற்போது ஆட்சேபனை இல்லை என்று சான்றிதழ் வழங்கினால்தான் இணைப்பு கொடுக்கிறார்கள். 176/1-ல் கிணறு வண்டிபாதை பாத்தியம் 1-ம் பிரதிவாதிக்கு உள்ளது என்றால் சரிதான், பூமி பாத்தியதை இல்லை. அதனால் 1-ம் பிரதிவாதிக்கு மேற்படி பூமியில் மின் இணைப்பு கொடுப்பதை தடுக்க எனக்கு உரிமையில்லை என்று சொன்னால் தவறு.

8) 176/1-ல் உள்ள அந்த கிணற்றில் தண்ணீர் எடுத்துக்கொள்ள 1-ம் பிரதிவாதிக்கு உரிமை உள்ளதா என்றால் உள்ளது. நீதிமன்ற தீர்ப்பிலும் தண்ணீர் எடுத்துக்கொள்ளலாம் என்று உள்ளதா என்றால் உள்ளது. 1-ம் பிரதிவாதிக்கு 176/1-ல் உள்ள கிணறு, வண்டிபாதை பாத்தியதை மறைத்து இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் தவறு. 173 காலையில் 1-ம் பிரதிவாதிக்கு எந்த Ownership உரிமையும் இல்லை என்று இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே எனக்கு தெரியும் என்றும் இருந்தும் பெயரளவிற்கு அந்த காலை சொத்தை குறிப்பிட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் தவறு. 1-ம் பிரதிவாதி மேற்படி கிணற்றில் தண்ணீர் எடுக்கக்கூடாது மற்றும் மின்இணைப்பு பெறக்கூடாது என்று கெட்ட எண்ணத்தில் அவருடைய உரிமைகளை மறைத்து இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் தவறு.

9) இவ்வழக்கில் கண்டுள்ள வழக்கு மூலமானது உண்மையில் ஏற்படவில்லை என்றும் 1-ம் பிரதிவாதி எங்கு குடியிருக்கிறார் என்ற விபரம் கூட எனக்கு தெரியாது என்றும் அதனால் இவ்வழக்கில் குறிப்பிட்டுள்ள வழக்குமூலமானது பொய்யானது என்று சொன்னால் தவறு. அதனால் இவ்வழக்கு தள்ளுபடி செய்யவேண்டியது என்றால் தவறு.

Take down by me/before me in open Court, interpreted/read over to the Witness and admitted by the deponent to be correct.